# கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் பாராட்டு!

முதல் பக்கத் தொடர்ச்சி....



கர்நாடகா மாநில துணை முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (03.09.2024) பெருநகர சென்னை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளை பார்வையிடும் விதமாக, அண்ணாநகர் மண்டலம், சேத்துப்பட்டில் உள்ள ஈரக்கழிவுகளிலிருந்து இயற்கை உயிரி எரிவாயு தயாரிக்கும் நிலையத்தினைப் பார்வையிட்டனர். இந்நிகழ்வில், கர்நாடக மாநில நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் உமா சங்கர், பெங்களூரு மாநகர (BBMP) ஆணையாளர் துஷார் கிரி நாத், கர்நாடக மாநில துணை முதலமைச்சரின் செயலாளர் ராஜேந்திர சோழன், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

உயிரி எரிவாயு தயாரிக்கும் நிலையத்தில் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் குறித்தும் பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து விரிவாகக் கேட்டறிந்தனர்.

இதனைத் தொடர்ந்து, கர்நாடகா மாநில துணை முதலமைச்சர் தலைமையிலான குழுவினர் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில், பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மையின் நடவடிக்கைகள் குறித்த செயல் விளக்கத்தினைப் பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினர்.

பின்னர் கர்நாடகா துணை முதலமைச்சர் பேசும்போது தெரிவித்ததாவது :

சென்னையில் திடக்கழிவு மேலாண்மையில் மொத்தக் கழிவுகள் எவ்வாறு மேலாண்மை செய்யப்படுகிறது, உயிரி எரிவாயு எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது என்பது குறித்து அலுவலர்களுடன் இன்று நான் சென்னைக்கு வந்து பார்வையிட வந்தேன். கடந்த ஒரு வருடமாக நான் இதைப் பற்றி கேள்விப்பட்டு வருகிறேன்.

சென்னையில் நடைபெற்று வரும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் குறித்து நானும், எனது அலுவலர்களும் ஈர்க்கப்பட்டோம். எனவே, தமிழ்நாடு அரசையும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி குழுவையும் நான் வாழ்த்த விரும்புகிறேன், வித்தியாசமான அணுகுமுறையை செய்துள்ளனர். இது நம் அனைவருக்கும் ஒரு நல்ல கற்றல் செயல்முறையாகும். இதனை முன்னெடுத்து எங்கள் மாநிலத்தில் திடக்கழிவு மேலா ண்மையை மேம்படுத்த முயற்சி செய்வோம். நாங்களும் முன்னெடுத்துச் சென்றுள்ளோம். ஆனால் இன்னும் நிறைய விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதனால் இங்கு வர நினைத்தேன். சென்னையானது மாதிரி நகரமாக இருப்பதால், சென்னையில் மேற்கொள்ளப்படும் பணிகளைப் பார்வையிட வந்தோம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வுகளில், மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், கர்நாடக மாநில நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் உமா சங்கர், பெங்களூரு மாநகர (BBMP) ஆணையாளர் துஷார் கிரிநாத், கர்நாடக மாநில துணை முதலமைச்சரின் செயலாளர் ராஜேந்திர சோழன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. முப்பெரும் விழாவில் பெருந்திரளாக பங்கேற்போம்!

## திருவாரூர் மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

*திருவாரூர், செப். 5-*

*சென்னையில் நடைபெற இருக்கும் கழக முப்பெரும் விழாவில் திருவாரூர் மாவட்டத்தில் இருந்து பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் பெருந்திரளாக பங்கேற்போம் என மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.*

*திருவாரூர் மாவட்ட தி.மு.க. பொதுஉறுப்பினர்கள் கூட்டம் அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., பங்கேற்றுசிறப்புரையாற்றினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின் வருமாறு,*

*இந்திய துணைப்பெரும் கண்டமே பாராட்டும் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் சாதனை திட்டங்களான காலை உணவு திட்டம், மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன், மக்களை தேடி மருத்துவம், போன்ற அரிய திட்டங்களை தந்து மக்களின் நன் மதிப்பை பெற்று நாடாளுமன்ற தேர்தலில் 40/40 வெற்றிக்கு வழிவகுத்த கழக தலைவர் தளபதி அவர்களுக்கு பாராட்டு,*

*கழக இளைஞர் அணி செயலாளராக பொறுப்பேற்று, தமிழ்நாடு முழுவதும் பயிற்சிப்பாசறை, இளைஞர் அணியின் இரண்டாவது எழுச்சி மாநாடு, 40 தொகுதிகளிலும் சூறாவளி சுற்றுப்பயணம், தமிழ் நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் , முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள், சென்னையில் சர்வதேச தரத்தில் கார் ரேஸ் உள்ளிட்டவைகளை நடத்தி இளைஞர்கள் நெஞ்சில் நிறைந்திருக்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு துணை முதல்வர் பொறுப்பு வழங்குதல்,*

*எதிர்வரும் செப்டம்பர்17 அன்று சென்னையில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவிற்கு சுவர் விளம்பரம் செய்வதோடு மாவட்டம் முழுவதிலும் இருந்து பெருந்திரளாக பங்கேற்பது. பவளவிழா காணும் நமது கழகத்தை போற்றும் விதமாக கலைஞர் நூறாண்டு விழா சிறப்பு கொடிமேடைகளை அமைத்து கழக கொடிகளை ஏற்றுவது,*

*எதிர்வரும் சட்டமன்ற தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்று கழக ஆட்சியை அரியணை ஏற்றுவது, உலகையே உலுக்கிய இயற்கையின் கோரத்தாண்டவமான கேரளா வயநாடு நிலச்சரிவில் உயர் நீத்த மக்களுக்கு இரங்கல் தெரிவிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றிய பெருந்தலைவர்கள் புலிவலம் ஏ.தேவா, சோம.செந்தமிழ்ச்செல்வன், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷணன், சாந்தி பாஸ்கர், மு.வெங்கடேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாண்டியன், பா.ஆடலரசன், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.செந்தில், கே.எஸ்.எஸ்.தியாகபாரி, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் பணகுடி ஏ.எஸ்.குமார் உள்ளிட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகநிர்வாகிகள், கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.*

## மரக்காணம் பேரூர் கழகக் கூட்டம்!

# கழகத்தில் அதிக அளவில் மகளிரை உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வேண்டுகோள்!

*மரக்காணம், செப். 5-*

*விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்ற தொகுதி மரக்காணம் பேரூர் கழக திமுக சார்பில் செயல் வீரர்கள் கூட்டம் மரக்காணத்தில் நடைபெற்றது*

*நகர அவைத் தலைவர் இளவரசன் தலைமை தாங்கினார்.நிர்வாகிகள் தேசப்பன், செல்வராஜ், மகாலட்சுமி சுந்தர், அன்பழகன், கார்த்திகேயன், முகமது அலி ,ஏழுமலை, பக்தவச்சலம், சிதம்பரம் ,தணிகன், கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*நகர செயலாளர் மரக்காணம் ரவிக்குமார்அனைவரையும் வரவேற்றார்.*

*கூட்டத்தில்விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.*

*கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்:*



*ஆட்சி பொறுப்பேற்ற தமிழ்நாடு முதலமைச்சர் 3 ஆண்டு காலத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் கழகத்தில் வலு சேர்ப்பதற்கு கழக ஆட்சியில் முதலமைச்சர் நிறைவேற்றிய பல திட்டங்களை கிராமங்கள் தோறும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.*

*முதலமைச்சர் தலைமையிலான ஆட்சி மக்களுக்கான ஆட்சி, மக்களுக்காக நடத்துகின்ற ஆட்சி என தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் கூடுதலாக பலம் சேர்க்கும் வகையில் மகளிரை அதிகளவில் தி.மு.க.வில் உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.*

*நிகழ்ச்சியில்மரக்காணம் பேரூராட்சி 17 வார்டு அ.தி.மு.க.வைச் சேர்ந்த மேலவை பிரதிநிதி குமார் கட்சியில் இருந்து விலகி அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் திமுகவில் இணைந்தார்.*

*திமுகவில் இணைந்த குமாருக்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.*

*கூட்டத்தில் செப்டம்பர் 15ஆம் தேதிசென்னையில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் மரக்காணம் பேரூர் தி.மு.க. சார்பில் திரளான திமுகவினர் பங்கேற்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட பொருளாளர் ரமணன், செயற்குழு உறுப்பினர் சீனராஜ், ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், பேரூராட்சி மன்ற தலைவர் வேதநாயகி ஆளவந்தார், பொதுக்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன், மாவட்ட ஆதி திராவிட நலக் குழு துணை அமைப்பாளர் அர்ஜுனன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இளைஞரணி அமைப்பாளர் கார்த்தி நன்றி கூறினார்.*




கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் வரதராஜபுரம் சாய்விவாகா மகாலில் நடைபெற்றது. கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் தலைமை தாங்கி, தலைமை உரையாற்றினார் மாவட்டக் கழக நிர்வாகிகள் கணபதி ராஜ்குமார் எம்.பி., மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி. முருகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, கழக சொத்துப் பாதுகாப்புக்குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கோவை மாநகராட்சி மேயர் இரா.ரங்கநாயகி, தலைமைக் கழக நிர்வாகிகள் பி.நாச்சிமுத்து, வழக்கறிஞர் கே.எம். தண்டபாணி, மு.இரா.செல்வராஜ், நா.முருகவேல், அ.தமிழ்மறை, டாக்டர் கோகுல் கிருபா சங்கர், வி.ஜி.கோகுல், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக்கழக, வட்டக்கழகச் செயலாளர்கள், மண்டலத் தலைவர்கள், நிலைக் குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பகுதிக்கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், BLA2 பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழகத் தொண்டர்கள், மற்றும் கழக பொது உறுப்பினர்கள் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் இறுதியில், சிங்காநல்லூர் பகுதி2 திமுக செயலாளர் சிங்கை மு.சிவா நன்றி கூறினார்.



திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டம் திருச்சிராப்பள்ளி மண்டலத்தின் சார்பில் விமான நிலையத்திற்குச் செல்லும் பேருந்தில் பயணிகளுடன் திருச்சி விமான நிலையம் எதிர்புறத்தில் உள்ள வயர்லெஸ் ரோடு பேருந்து நிறுத்தத்தில் இருந்து பள்ளிகல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 03/09/2024 அன்று காலை பயணம் செய்தார். இந்நிகழ்வில் மண்டல குழு தலைவர் மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், தர்மராஜ், மணிவேல், மாவட்டத் துணைச் செயலாளர் செங்குட்டுவன் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திருச்சிராப்பள்ளி மண்டல பொது மேலாளர் ஆ.முத்துகிருஷ்ணன், துணை மேலாளர் புகழேந்திராஜ், துணை மேலாளர் சாமிநாதன், உதவி மேலாளர் ராஜேந்திரன் மற்றும் பயணிகள் உடன் இருந்தனர்.